அரசினுடைய அலுவலளர்கள் 'on deputation' என்ற அடிப் படையில் முகமையில் அனுப்பப்பட்டு தொழிற்சாலைகளில் பணி யாற்றுவார்களானல், தொழிலாளர்களுடைய நலன்களுக்காகப் பாடுபடுவார்கள். அங்கே உள்ள தொழில் அதிபர்களுக்குப் பயன் பட வேண்டிய தேவையில்லை, பாரபட்சம் இல்லாமல் அவர்கள் பணியாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Arignar Anna Government Hospital of Indian Medicine, Madras

* 78 *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM (on behalf of Thiru S. Muthuswamy): Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that there is no special ward in Arignar Anna Government Hospital of Indian Medicine, Madras; and

(*b*) if so, whether there is any proposal to open such a ward?

அறிஞர் அண்ணு இந்திய முறை அரசு மருத்துவமனை, சென்னை.

திரு. க. மீனுட்சிசுந்தரம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) மாண்புமிகு நலவாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, அறிஞர் அண்ணு இந்திய முறை அரசு மருத்துவமனையில் தனி வார்டு ஏதுமில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அத்தகைய தனி வார்டு ஒன்றைத் திறக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: (அ) ஆம்.

(இ) தனிப் பகுதி திறப்பது சம்பந்தமான கருத்து 1978-83 ஆண்டுகளுக்கான திட்டங்களுள் சேர்ப்பது பற்றி பரிசிலிக்கப் படுகிறது.

திரு. க. அறிவழகன்: சென்னையில் உள்ள அறிஞர் அண்ணு இந்திய முறை அரசு மருத்துவமனையில் தனி வார்டு துவக்கப் படவேண்டும் என்பது கேள்வியாகும், அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, அதுபற்றிய செயற்குறிப்புகள் இருக்கின்றன என்ருர்கள், எத்தனை படுக்கைகள் அமைக்கப்படும் என்றும், அது எவ்வளவு விரைவாக பேரறிஞர் அண்ணு அவர்களுக்குப் பெருமை தரத்தக்க வகையில் திறக்கப்பட இருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்,

1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:— இரண்டு படுக்கைகள் கொண்ட ஏ-பிரிவு, 2 படுக்கைகள் கொண்ட பீ-பிரிவு, 16 படுக்கைகள் கொண்ட சி-பிரிவு, 5 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு முதலியவை திறப்பதுபற்றி ஆய்வு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. க. மீனுட்சிசுந்தரம்: சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச மருத்துவச் சலுகை இருப்பதாக நான் அறிகிறேன். தற்போதைய வினவிற்கு இப்போது நான் கேட்கவிருக்கும் வினு தொடர்புடையது அல்ல என்ருலும், மாண்புமிகு மக்கள் நலத் துறை அமைச்சர் அவர்கள்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்பதால், தயவு செய்து இதற்கு விடையளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னைப் போன்று ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறவர்களின் ஆசிரியக் குடும்பங்களுக்கெல்லாம் இலவச மருத்துவச் சலுகைகள் உண்டு. ஆனல் நான் சட்டமன்ற மேலவை உறுப்பினுக ஆகிவிட்டதையடுத்து எனக்கு மட்டும்தான் அந்தச் சலுகை உண்டு என்றும் எனது குடும்பத்தினருக்கு அந்தச் சலுகை இல்லை என்றும் சொல்லப்படுகிறது. எனவே உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவச் சலுகை அளிக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

Examination held in Tirunelveli Medical College.

* 79 *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU M. Sankaralingam): Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that 71 Medical College students were affected due to the wrong distribution of question papers in the examination held at Tirunelveli Medical College during April, 1978 ; and

(*b*) if so, the alternative arrangements made to rectify the same?

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் நடந்த தேர்வு.

திரு. வே. தங்கப்பாண்டியன்: (திரு எம். சங்கரலிங்கம் சார்பில்) மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்கவேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் நடந்த தேர்வில் வினத்தாள்களை